The Hindu (English)
Dated: 17.12.2024

# No substance in complaints against EVMs: Trinamool MP

**The Hindu Bureau**
NEW DELHI

Trinamool Congress MP Abhishek Banerjee on Monday dismissed concern about the tampering of electronic voting machines (EVMs), close on the heels of similar remarks by National Conference leader and J&K Chief Minister Omar Abdullah, increasing the Congress's isolation within the INDIA.

After the recent Assembly elections in Maharashtra, Jharkhand, and Haryana, the Congress had raised questions about the working of the EVMs. The Congress Working Committee, on November 29, passed a resolution saying that the integrity of the entire electoral process was "being severely compromised", and announced a "national" movement to raise public concern on the issue.

Without naming the Congress, Mr. Banerjee, while speaking to presspersons outside Parliament, said, "Those who are raising questions about the EVMs, should hold a demonstration on its discrepancies to the Election Commission... I don't think there is anything substantial in these allegations." At the same time, he added that if "someone" felt that EVMs could be manipulated, then they should present evidence to back such a claim.

The Times of India
Dated: 17.12.2024

# After Omar, now TMC snubs Cong for EVM hacking claim

## Cong Attacks Omar's 'Change In Approach' Towards INDIA After Win

Akhilesh.Singh
@timesofindia.com

**New Delhi:** Close on the heels of National Conference leader and J&K CM Omar Abdullah questioning Congress for its inconsistent stance on EVMs, another INDIA bloc partner, Trinamool Congress (TMC), has disengaged itself from the leading opposition party's carping against the voting machines.

"People who raise questions on EVMs should go and show a demo to the Election Commission (EC). If work is done properly at the time of EVM randomisation and people at the booth verify during mock polls and counting, then I don't think there is any substance to these allegations," influential TMC MP and party national general secretary Abhishek Banerjee told reporters here, in what marked a strong endorsement of the EC's claim about the voting machines being rigging proof.




**OUTCRY:** Opposition protest against EVMs at Maharashtra assembly session on Monday

TMC has been consistently winning elections against powerful opponents: BJP and once-dominant Left. The divergence of the INDIA bloc partners with Congress's stand is the second big instance of dissonance in the coalition.

"When you get hundred-plus MPs using the same EVMs and you celebrate that as sort of a victory for your party, you can't then a few months later turn around and say ... we don't like these EVMs because now the election results aren't going the way we would like them to," he had said.

Congress MP Manickam Tagore asked the J&K CM why has he changed his approach towards INDIA bloc partners after coming to power. Parties such as SP, NCP (SP), Shiv Sena (UBT) have spoken against EVMs while Congress is focused on the EC.

"Please check your facts, CM Abdullah. Congress Working Committee resolution clearly addresses the EC only. Why this approach to our partners after becoming CM?" he asked.

Maharashtra CM Devendra Fadnavis said, "Whenever Congress loses elections, instead of introspecting, it blames someone else. Unless it introspects, it will not win elections ... When they form govts in Karnataka and Jharkhand, there is no problem with EVMs, but when they lose Maharashtra, they blame EVMs," he said.

Dt.Next, Dated: 17.12.2024

# Statements not enough, prove fault lines: Abhishek on EVMs

**NEW DELHI: Those raising questions on Electronic Voting Machines should give a demonstration of any "discrepancies" to the Election Commission, Trinamool Congress (TMC) leader Abhishek Banerjee said on Monday.**

Banerjee's remarks come after Jammu and Kashmir Chief Minister Omar Abdullah, another leader of the INDIA bloc, dismissed the Congress' strong objections to EVMs, saying the party raises questions about their reliability only when it loses.

Asked about leaders from different INDIA bloc parties supporting Mamata Banerjee on the leadership issue, the TMC national general secretary told reporters that the alliance members will sit and discuss it. "This is my personal opinion that those who are raising questions on the EVMs should show a demo of its discrepancies to the EC. They should show any video (as evidence) to the EC," he said.

> **If someone feels EVMs can be manipulated, visit EC and show a demo proving that there is some malware to hack EVMs**
> — Abhishek Banerjee

The TMC leader said once there is proper monitoring during various stages of the polling process by booth workers and others, there is "nothing substantial" in these allegations.

"I have been conducting elections on-ground for a long time. If someone works well during EVM randomisation and the booth workers check EVMs during mock polls or review the form 17C, which is used to check ballot units or control units, during the counting of votes, I don't think there is anything substantial in these allegations [of EVM manipulation]," he said, adding, "Even after that, if someone feels that the EVMs can be manipulated, their delegation should visit the EC and show a demo or evidence proving that there is some malware or technology to hack EVMs. If they are unable to do that, a movement or Andolan should be organised over the issue. Only making 2-3 statements does not mean anything," he said.

The Hindu (Tamil)
Dated: 17.12.2024

# தேசிய வாக்காளர் தினத்தையொட்டி நாளை விநாடி-வினா போட்டி

■ சென்னை

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, கல்லூரி மாணவிகளுக்கான விநாடி–வினா போட்டி சென்னை மாநகராட்சி சார்பில் நாளை நடைபெறுகிறது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய தேர்தல் ஆணையம் ஜனவரி 25–ம் தேதி நிறு வப்பட்டது. இத்தினத்தை தேசிய வாக்காளர் தினமாக இந்திய தேர்தல் ஆணையம் கொண்டாடி வருகிறது. 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்ப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் முக்கிய நோக் கமாக விளங்குகிறது.

இந்த ஆண்டு தேசிய வாக்காளர் தினம் ஜன.25–ம் தேதி கொண்டாடப்படுகிறது. இக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கல்லூரிகளுக்கு இடையேயான இளங்கலை பயிலும் கல்லூரி மாணவிகள் பங்கேற்கும் விநாடி–வினாப் போட்டி நடைபெற உள்ளது. சென்னை, நுங்கம் பாக்கத்தில் அமைந்துள்ள கிறிஸ்துவ மகளிர் கல்லூரி யில் நாளை (டிச.18) காலை 10 முதல் பிற்பகல் 1 மணிவரை இப்போட்டி நடைபெற உள்ளது. இதில் மாநக ராட்சிக்கு உட்பட்ட பல்வேறு கல்லூரிகளில் இளங்கலை பயிலும் சுமார் 200 மாணவிகள் பங்கேற்க உள்ளனர். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

The Hindu (Tamil)
Dated: 17.12.2024

# இரட்டை இலை விவகாரத்தில் தேர்தல் ஆணையம் உத்தரவு

சென்னை

அதிமுகவின் இரட்டை இலை சின்னம் விவகாரம் தொடர்பான விசாரணைக்கு டிச.24-ம் தேதி ஆஜராக வேண்டும் என்று பெங்களூரு புகழேந்திக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்யமூர்த்தி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், அதிமுகவின் உள்கட்சி விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்துள்ள உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும்வரை அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக் கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட கோரியிருந்தார்.

இந்த வழக்கில் கடந்த டிச.4-ம் தேதி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், "சூர்யமூர்த்தியின் மனு குறித்து தேர்தல் ஆணையம் 4 வாரங்களில் முடிவெடுக்க வேண்டும். பன்னீர்செல்வம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் கருத்துகளையும் கேட்க வேண்டும்'' என கூறப்பட்டிருந்தது. மேலும் டெல்லி உயர் நீதிமன்றமும் புகழேந்தியின் மனுக்களை பரிசீலிக்க ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் தேர்தல் ஆணையம் சார்பில் அதிமுக ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த புகழேந்தியை, டிச.24-ம் தேதி காலை 11 மணிக்கு விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

The Hindu (Tamil)
Dated: 17.12.2024

# 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதா மக்களவையில் இன்று தாக்கல்

புதுடெல்லி

மக்களவையில் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதா இன்று தாக்கல் செய்யப்பட உள்ளது.

மக்களவை, நாட்டின் அனைத்து மாநில சட்டப் பேரவைகள் மற்றும் உள்ளாட்சிகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வந்தது. இதுதொடர்பாக ஆய்வு நடத்தி மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்க, முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் உயர்நிலை குழுவை மத்திய அரசு அமைத்தது.

அரசியல் கட்சியினர், சமூக அமைப்பினர் உட்பட பல்வேறு தரப்பினருடன் இந்த குழுவினர் ஆலோசனை நடத்தினர். இதைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவிடம் இந்த குழு தனது அறிக்கையை கடந்த மார்ச் மாதம் தாக்கல் செய்தது. இதை, மத்திய அமைச்சரவை கடந்த செப்டம்பரில் ஏற்றுக்கொண்டது.

இதைத் தொடர்ந்து, ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம் தொடர்பான மசோதா தயாரிக்கப்பட்டது. இந்த மசோதாவுக்கு, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை கடந்த 12–ம் தேதி ஒப்புதல் அளித்தது.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடந்து வரும் நிலையில், மக்களவையில் இந்த மசோதா நேற்று தாக்கல் செய்யப்பட இருந்தது. ஆனால், நேற்றைய அலுவல்கள் பட்டியலில் இந்த மசோதா தாக்கல் இடம்பெறவில்லை.

இந்நிலையில், ஒருநாள் தாமதமாக மக்களவையில் இந்த மசோதா இன்று தாக்கல் செய்யப்படும் என்று தெரியவந்துள்ளது. சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தாக்கல் செய்து உரையாற்றுகிறார்.

இந்த மசோதா தாக்கலின்போது அவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இருக்க வேண்டும் என மத்திய அரசு விரும்பியது. 3 நாள் பயணமாக சத்தீஸ்கர் சென்ற அவர், இன்று டெல்லி திரும்புகிறார். மக்களவை நடவடிக்கைகளிலும் பங்கேற்கிறார். இதனாலேயே, மசோதா தாக்கல் ஒருநாள் தாமதமானதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

Daily Thanthi

Dated: 17.12.2024

அரசியல் பரபரப்புகளுக்கு இடையே

# ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல்

## எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தால் கூட்டுக்குழுவுக்கு அனுப்ப வாய்ப்பு

புதுடெல்லி, டிச.17-

அரசியல் பரபரப்புகளுக்கு இடையே ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா, நாடாளுமன்றத்தில் இன்று (செவ்வாய்க்கிழமை) தாக்கல் ஆகிறது. எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தால் கூட்டுக்குழுவுக்கு அனுப்பவும் வாய்ப்பு உள்ளது.

### ஒரே நாடு ஒரே தேர்தல்

நாடாளுமன்றம், சட்டமன்றத்துக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வகை செய்யும் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு கடந்த சில தினங்களுக்கு முன்பு மத்திய மந்திரி சபை ஒப்புதல் கொடுத்தது.

இதையடுத்து அந்த அரசியல் சாசன திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் எப்போது வேண்டுமானாலும் தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த மசோதாவுக்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது மாநிலங்களின் குரலை ஒடுக்கும். இதை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்போம் என்று தெரிவித்துள்ளார்.

### மசோதா இன்று தாக்கல்

நாடாளுமன்ற கூட்டத்தொடர் 20-ந் தேதி முடிவடைய உள்ளதால் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா நேற்று தாக்கல் ஆகும் என மிகவும் எதிர்பார்த்தனர். ஆனால் நேற்றைய அலுவல் பட்டியலில் அது இடம்பெறவில்லை.

இந்த நிலையில் அந்த மசோதா இன்று (செவ்வாய்க்கிழமை) தாக்கல் செய்யப்பட இருப்பதாக தெரிகிறது. மத்திய சட்டத்துறை மந்திரி அரஜுன்ராம் மெக்வால், மக்களவையில் பகல் 12 மணிக்கு மசோதாவை தாக்கல் செய்கிறார்.

இதற்கு எதிர்ப்பு கிளம்பும் பட்சத்தில் அதனை கூட்டுக்குழு விசாரணைக்கு சபாநாயகர் ஓம் பிர்லா அனுப்பிவைப்பார் எனவும் தகவல்கள் எடுத்துரைக்கின்றன.

### பா.ஜனதா எம்.பி.க்களுக்கு அழைப்பு

இதுதொடர்பாக நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் கூறுகையில், மத்திய மந்திரியின் பரிந்துரை அடிப்படையில் கூட்டுக்குழுவுக்கு மசோதா அனுப்பப்படுமானால், கூட்டுக்குழுவில் நாடாளுமன்றத்தில் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பிரதிநிதிகள் இடம் பெறுவார்கள். அந்த பெயர்களை மக்களவை சபாநாயகரே அறிவிப்பார். குழுவின் தலைவராக பா.ஜனதாவை சேர்ந்த எம்.பி.யே நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளது. நாடாளுமன்ற கூட்டுக்குழுவில் இடம் பெறும் அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் பெயர்கள் அடங்கிய பட்டியலை இன்று மாலைக்குள் சபாநாயகர் அறிவிப்பார் என்று அவர் கூறினார்.

மசோதா இன்று தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில், இன்றைய நாடாளுமன்ற நிகழ்வுகளில் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என பா.ஜனதாவின் அனைத்து எம்.பி.க்களுக்கும் கொறாடா உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

### ஜனாதிபதி ஆணை

ஒரே நாடு ஒரே தேர்தல் சட்டம் அமலுக்கு வந்த பிறகு, நாடாளுமன்ற தேர்தலுடன் மாநில சட்டசபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும்போது ஒரு மாநில சட்டசபைக்கு மட்டும் தேர்தல் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படலாம்.

அத்தகைய சூழ்நிலையில் என்ன செய்வது என்பது பற்றி மசோதாவில் கூறப்பட்டுள்ளது. மசோதாவின் பிரிவு 2, உட்பிரிவு 5-ல் கூறப்பட்டு இருப்பதாவது:-

நாடாளுமன்ற தேர்தலுடன் ஏதேனும் ஒரு மாநிலத்தில் சட்டசபை தேர்தல் நடத்த முடியாது என்று தேர்தல் கமிஷன் கருதினால், அந்த மாநில சட்டசபை தேர்தலை பிறிதொரு நாளில் நடத்தும் வகையில் ஆணை பிறப்பிக்க ஜனாதிபதிக்கு தேர்தல் கமிஷன் பரிந்துரை செய்யும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### புதிய பிரிவு சேர்ப்பு

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' முறையை சட்டமாக்க அரசியல் சாசனத்தில் 82ஏ என்ற புதிய பிரிவு சேர்க்கப்படுகிறது. இதுதான் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான பிரிவு ஆகும்.

Dinamalar, Dated: 17.12.2024

# தேர்தல் கமிஷன் புகழேந்திக்கு அழைப்பு

**சென்னை, டிச. 17–**

இரட்டை இலை விவகாரம் தொடர்பாக, வரும் 24ம் தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி, அ.தி.மு.க., முன்னாள் செய்தி தொடர்பாளர் புகழேந்திக்கு, தேர்தல் கமிஷன் கடிதம் அனுப்பி உள்ளது.

இரட்டை இலை சின்னம், மறைந்த அ.தி.மு.க., அவைத் தலைவர் மதுசூதனன் தலைமையிலான அணிக்கு வழங்கப்பட்டது தொடர்பாகவும், பன்னீர்செல்வம் நீக்கம், பொதுச் செயலராக பழனிசாமி தேர்வு போன்றவை தொடர்பாகவும், அ.தி.மு.க.,விலிருந்து நீக்கப்பட்ட புகழேந்தி, தேர்தல் கமிஷனில் பல்வேறு மனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

சமீபத்தில் இரட்டை இலை சின்னம் தொடர்பாக, அனைத்து தரப்பினரையும் அழைத்து பேசி முடிவெடுக்கும்படி, தேர்தல் கமிஷனுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன் அடிப்படையில், வரும் 24ம் தேதி காலை 11:00 மணிக்கு, டில்லியில் உள்ள, தலைமை தேர்தல் கமிஷன் அலுவலகத்திற்கு நேரில் வர வேண்டும் என, புகழேந்திக்கும், முன்னாள் எம்.பி., கே.சி.பழனிசாமிக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

Daily Thanthi
Dated: 17.12.2024

# 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' மசோதா நிறைவேறுமா?

'ஒரே நாடு; ஒரே தேர்தல்' மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கும் என்பதால், இந்த சட்ட மசோதா நிறைவேறுமா?, இதற்கு முன்பு ஒரே நேரத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்கள் நடந்தது இல்லையா? என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு முதன் முதலில் 1951–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலும், மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தல்களும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டன. வாக்குச்சீட்டு முறை அப்போது நடைமுறையில் இருந்ததால் எம்.பி.க்கு ஒரு ஓட்டும், எம்.எல்.ஏ.வுக்கு ஒரு ஓட்டும் என 2 ஓட்டுகளை வாக்காளர்கள் பதிவு செய்தனர்.

## அன்று முதல் இன்று வரை

68 கட்டங்களாக நடந்த இந்த தேர்தலை நடத்தி முடிக்க 5 மாதங்கள் ஆனது. 1957, 1962, 1967–ம் ஆண்டுகளிலும் இதே நடைமுறையில்தான் தேர்தல்கள் நடந்தன. ஆனால், 1968–1969–ம் ஆண்டுகளில் அரசியலில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால், சில மாநிலங்களில் சட்டசபை கலைக்கப்பட்டன.

4–வது நாடாளுமன்றத்தின் பதவிக்காலமும் 1971–ம் ஆண்டுடன் முடிவடைய இருந்த நிலையில், அதுவும் கலைக்கப்பட்டு ஒரு ஆண்டுக்கு முன்னதாகவே (1970) தேர்தல் நடத்தப்பட்டது. இந்த நேரத்தில், நாடாளுமன்றத்துக்கும், சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. அன்று முதல் இன்று வரை இரு தேர்தல்களும் தனித்தனியாகவே நடத்தப்பட்டு வருகின்றன.

## மாநில கட்சிகள் எதிர்ப்பு

இதற்கிடையே, கடந்த 1983–ம் ஆண்டு மீண்டும் நாடாளுமன்ற தேர்தலையும், சட்டமன்ற தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த தலைமை தேர்தல் ஆணையம் பரிந்துரை செய்தது. ஆனால், மாநில அளவிலான கட்சிகள் இதை ஏற்கவில்லை. தங்களின் தனித்துவம் பாதிக்கப்படும் என்று கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

அதன்பிறகும், 1999, 2003–ம் ஆண்டுகளில் ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், இரு தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டன.

## உயர்மட்டக்குழு கருத்து கேட்பு

2014–ம் ஆண்டு மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு, "ஒரே நாடு; ஒ்ரே தேர்தல்" கோஷம் மீண்டும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இந்நிலையில் இந்த திட்டத்தை அமல்படுத்த முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த குழுவினர் அரசியல் கட்சியினர், சமூக அமைப்புகள் என பல்வேறு தரப்பினரிடமும் கருத்துகளை கேட்டு ஆராய்ந்தனர்.

பின்னர், தனது அறிக்கையை கடந்த மார்ச் மாதம் ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் உயர்மட்டக்குழு சமர்ப்பித்தது. இந்த குழுவின் பரிந்துரையை மத்திய அரசு கடந்த 12–ந் தேதி ஏற்றுக்கொண்ட நிலையில், 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' மசோதாவுக்கு மத்திய மந்திரி சபையும் ஒப்புதல் அளித்தது.




## மசோதா நிறைவேறுமா?

இந்த நிலையில், 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' மசோதா நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. இந்த மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசுக்கு பெரும்பான்மை பலம் தேவைப்படுகிறது. மக்களவையில் மொத்தம் உள்ள 543 எம்.பி.க்களில், தற்போது ஒரு இடம் காலியாக உள்ளது.

மசோதாவை நிறைவேற்ற 3–ல் இரண்டு பங்கு, அதாவது 361 எம்.பி.க்களின் ஆதரவு தேவை. தற்போது, பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 293 இடங்களும், காங்கிரஸ் தலைமையிலான 'இந்தியா' கூட்டணிக்கு 235 இடங்களும் உள்ளன. எனவே, இந்த மசோதா நிறைவேற பா.ஜனதாவுக்கு இன்னும் 68 உறுப்பினர்களின் ஆதரவு கூடுதலாக தேவை. அதற்கான சாத்தியம் குறைவாகவே இருப்பதால், மசோதா நிறைவேறுவதில் சிக்கல் ஏற்படும் என தெரிகிறது.

## சாதக, பாதகம் என்ன?

சரி.. இனி "ஒரே நாடு: ஒரே தேர்தல்" நடைமுறை அமலுக்கு வருவதில் இருக்கும் பல்வேறு சாதக, பாதக நிலைகளை பார்ப்போம். சாதகமான அம்சம் என்னவென்றால், தேர்தல் செலவு மிச்சமாகும். மேலும், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை இரு தேர்தல்களும் ஒன்றாக வருவதால், வாக்காளர்கள் ஆர்வத்துடன் ஓட்டுப்போட வருவார்கள். அரசியல் கட்சிகளுக்கும் ஒட்டுமொத்த செலவுகள் குறையும். ஆட்சியில் இருப்பவர்களுக்கும் அரசின் திட்டங்களை ஒரே நேரத்தில் நாடு முழுவதும் செயல்படுத்த முடியும்.

பாதகம் என்னவென்றால், ஏதாவது ஒரு மாநில சட்டமன்றத்தில் ஆட்சி கவிழ்ந்து போனால், ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது என்பது சவாலானது. மேலும், தேசிய மற்றும் மாநில அளவிலான பிரச்சினைகளில் வாக்காளர்களுக்கு குழப்பம் ஏற்படும். இது தேசிய கட்சிகளுக்கு சாதகத்தையும், மாநில கட்சிகளுக்கு பாதகத்தையும் ஏற்படுத்தும்.

## வாக்குப்பதிவு எந்திரங்கள் அதிகம் தேவை

நாடாளுமன்ற தேர்தல், சட்டமன்ற தேர்தல்கள் ஆகியவற்றை ஒன்றாக நடத்தும் நிலை ஏற்பட்டால், இப்போது இருப்பதைவிட கூடுதலாக 12 லட்சத்து 90 ஆயிரம் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், 9 லட்சத்து 40 ஆயிரம் கட்டுப்பாட்டு கருவிகள், 12 லட்சத்து 30 ஆயிரம் வாக்கு ஒப்புகைச் சீட்டு எந்திரங்கள் புதிதாக வாங்க வேண்டிய நிலை ஏற்படும். இந்த தகவலை சட்ட ஆணையம் நடத்திய ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

ஒரு வாக்குப்பதிவு எந்திரத்தின் விலை ஏறக்குறைய ரூ.33 ஆயிரத்து 200 ஆகும். இதை வைத்து கணக்கிடும்போது, கூடுதலாக வாக்குப்பதிவு எந்திரங்கள், ஏனைய பொருட்கள் வாங்க ரூ.4 ஆயிரத்து 555 கோடி தேவைப்படும். இந்த ஆண்டு ரூ.1,751 கோடிக்கும், 2029–ம் ஆண்டு ரூ.2,017 கோடிக்கும், 2034–ம் ஆண்டு ரூ.13,981 கோடிக்கும் கூடுதலாக வாக்குப்பதிவு எந்திரங்கள் வாங்கவேண்டிய நிலை ஏற்படும்.

## சாத்தியமாகுமா?

மேலும், வாக்குப்பதிவு மையங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். அதில் பணியாற்றும் தேர்தல் அதிகாரிகளின் எண்ணிக்கையும், பாதுகாப்புக்கான துணை ராணுவ படையினரின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, மக்கள்தொகையில் உலக அளவில் முதலிடம் பிடித்துள்ள இந்தியாவில், 543 நாடாளுமன்ற தொகுதிகள், 4,120 சட்டமன்ற தொகுதிகள் என ஒரே நேரத்தில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவான தேர்தலை நடத்தி முடிப்பது என்பது மிகப்பெரிய சவால் ஆகும். அது சாத்தியமாவது சிரமம் என்றே தெரிகிறது.